நடைபெறுகின்ற விபத்துக்களைத் தடுக்கும்பொருட்டு வேகத்தடை போர்டுகள் வைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதுசம்பந்தமாக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகர எலலைக்குள் ஆட்கள் நடமாட்டம் அதிகமுள்ள சினிமா தியேட்டர், கல்வி ஸ்தாபனம் மற்றும் அரசு மருத்துவமனைகள் அந்த தேசிய நெடுஞ்சாலையில்தான் இருக்கின்றன. இவ்வாறு தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற காரத்தினால் அடிக்கடி விபத்துகள் எல்லாம் நடக்கின்றன. அவ்வாறு அந்த விபத்துகள் நடக்காமல் தடுப்பதற்கு அரசு பொதுப் பணித்துறை மூலமாக, நெடுஞ்சாலைத் துறை மூலமாக ‘புட் பாத்’ அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறத்ா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரத்திலே, நம்முடைய ஆட்சி வருவதற்கு முன்பு, சாலை எப்படி இருந்தது என்பதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அறிவார். அதற்குப் பின்னாலே, அதிகமாக நிதி ஒதுக்கி, இந்த ஆட்சிக் காலத்திலே, நம்முடைய ஒப்பற்ற புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே, பரமக்குடி நகருக்குள்ளே, அந்த தேசிய நெடுஞ்சாலையை மேம்பாடு செய்தோம் என்பதை உறுப்பினர் மறந்திருக்கமாட்டார். ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை, புதியதாக ‘புட் பாத்’ வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தற்போது, அத்தகைய செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 1994-95 - - அவையில் முன்மொழிதல் குறித்து. (ஆ.செ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994-95–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

'In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the financial year 1994-95.'

6. மானியக் கோரிக்கைகள், 1994-95 விவாதமும், வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

மானியக் கோரிக்கை எண் 34--நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994-95-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்-தொடர்ச்சி மானியக் கோரிக்கை எண் 34- நுகர்பொருள் வழங்கல், மாண்புமிகு உணவு அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 530,97,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள். திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப் பெறவில்லை.*

மானியக் கோரிக்கை பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்கல் பற்றிய அரசின் கொள்கை விளக்கக் குறிப்பு அவையிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அதன் மீது தெரிவிக்கிற கருத்துக்களைத் தெரிந்து கொண்டு, இறுதியிலே பதில் அளிக்க இருக்கிறேன். தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி அவையின் பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே ஒரு சிறிய திருத்தம் இருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழ், பக்கம் எண் 3, பாரா 7-ல், வரி 3-ல்,

@ 405 முதல் 468 வரையிலான பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.